முருகப்பெருமான் துணை

**மகான் சிவானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.02.2024,** புதன்கிழமை

1. பேருகமெல்லாம் உன் ஞானம்
பேதமகற்றி காத்தருள வேண்டி
ஆறுமுகனார் அவதாரமாக வந்த
அண்ணலே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது கலைதிங்கள்
அறுநான்கு திகதி புந்தி வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 24 ம் நாள், 07.02.2024, புதன்கிழமை)
3. வாரமதில் சிவானந்தர் யானும்
வழங்குவேன் உலக நலம்பெற
பாருலகில் நல்லோர் படைகள்
பண்பான வழி வளர்ந்தோங்க
4. ஓங்கவே பிரணவக் குடில்படைத்து
ஓங்கார ஞானம் அருளுகின்ற
ஓங்கார ஞானியரின் வழி
உலகோர் ஞானிகள் பூசை
5. பூசை கலந்து ஆசிபெற
பிறவிக்கடன் தீர்க்கின்ற
நேசக்கரமுடன் அன்னதான சேவை
நிலமதனில் செய்து வருக
6. வருகவே நீதிநெறி பிறழா
வாழுகின்ற ஞானம் கிட்டி
தரும பாதை விட்டு அகலா
தவசிபோல வாழ்க்கை சிறந்து
7. சிறந்துமே மேலவர்கள் ஆசிபட
சிறப்பறிவு கூடி உலகோர்
அருந்தவசி அரங்கன் ஆசியால்
அனுகுவார் ஆற்றல்பல அடைவர்

8. அடைவரே கலியில் சிறந்த
ஆன்ம ஞான பலமுடன்
கடைத் தேற்றம் பெற்றவராக
கந்தப் பெருமான் பார்வைக்கு வருவர்

9. வருகவே உலகம் எங்கிலும்
வடிவேலனார் வெளிப்படவே
உருவாகும் ஞானச் சூழலாக
உயர்வான ஞானச்சித்தர் காலமாக

10. ஆகவே மாற்றம் கண்டு
அறிவிப்பேன் ஞானத் தலைமை
வகையான ஞான ஆட்சி
வரமாகப் பேருலகம் அடையும்

11. அடையவே அரங்கன் அவதாரம்
அகிலம் பாதுகாப்புக்கும்
சோடை வெல்வதற்குமாக இருக்க
செகத்தோர் அனுகிட மாற்றமுண்டு
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–